**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**

**NAGAPATTINAM.**

**S.C.191/2017 –** P.W.1

Deposition of witness for Prosecution:

Name : திருமதி. விஜயா Husband Name. பன்னீர்செல்வம்

Village : செண்பகராயநல்லூர்

Date : 20.01.2025

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 20.01.2025.

**( எதிரிகள் ஆஜர் )**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ் நன்கு எழுதப்படிக்க தெரியும். நான் 10ம் வகுப்பு படித்ததை வைத்துதான் சத்துணவு அமைப்பாளராக பணிக்கு சேர்ந்தேன். நான் சம்பவம் நடந்த கால கட்டத்தில் அரசு பணியில் இருந்தேன் என்று சொன்னால் சரிதான். ஆனால் சம்பவம் நடந்த அன்று விடுமுறை என்பதால் வேலையில் இல்லை. நான் வழக்கிற்காக சம்பவம் நடந்த அன்று விடுப்பு என்பதால் வேலையில் இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட அன்று நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு எதிர்புறம் அன்று வார சந்தை நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். அதனால் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட அன்று அந்த இடத்தில் கூட்டமாக இருந்திருப்பார்கள் என்று சொன்னால் அன்று சந்தை நடைபெற்றிருந்தபோதும் சம்பவ இடத்தில் கூட்டமாக இல்லை. நான் சொல்லக்கூடிய விபரம் பொய்யானது என்றும் அன்றைய தேதியில் சந்தை என்பதால் வீட்டிற்கு தேவையான ஆடு, மாடுகள் உட்பட மளிகை பொருட்கள் வாங்குவதற்காக கூட்டம் அதிகமாக கூடியிருந்தது என்று சொன்னால் அன்று என்ன நடந்ததென்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. ஆஜர் எதிரிகளை தவிர எங்கள் வீட்டிற்கு பின்னால் நிறைய குடியிருப்புகள் உள்ளது என்று சொன்னால் நிறைய குடியிருப்புகள் என்று சொல்ல இயலாது சுமார் 15, 20 குடியிருப்புகள் உள்ளது. எங்கள்

வீட்டிற்கு பின்னால் குடியிருப்பவர்கள் மீது நாங்கள் ஓர் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் எனது அண்ணன் தாக்கல் செய்துள்ளார். பகல் 11.45 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும்போதே காவல் நிலையத்திற்கு ஏதேனும் புகார் கொடுத்தோமா என்றால் சம்பவம் நடக்கும்போது எந்தவித புகாரும் கொடுக்கவில்லை. அதனை தொடர்ந்து அடிபுடி தகராறு நடந்த பின்னிட்டு புகார் கொடுத்தோம். நாங்கள் கொடுத்த புகாரை காவல் நிலையத்தில் பெற்றுக்கொண்டார்களா என்றால் ஆமாம். சம்பவம் நடந்தவுடன் மருத்துவமனைக்கு வந்து புகார் வாங்கினார்கள். நானும் சம்பவம் நடந்த அன்று இரவே காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். காயம்பட்ட எனது கணவரை மருத்துவமனைக்கு யார் எதன் மூலம் அழைத்து சென்றோம் என்றால் காரில் வைத்து செந்தமிழ்செல்வம், பாலு, ஆர்.வி.ஆர். பன்னீர்செல்வம் ஆகியோருடன் நானும் அழைத்துசென்றேன். மேற்படி நபர்களுடன் எனது கணவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் மலேசியாவில்தான் வேலைப்பார்த்துவந்தார் என்று சொன்னால் சம்பவத்திற்கு முன்பாக வேலைப்பார்த்துவந்தார். என்ன மாதிரியான வேலைப்பார்த்து வந்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் என்ன படித்திருந்தார் என்றால் அவரும் 10 வதுதான் படித்திருந்தார். நான் போலிசார் விசாரணையிலும், எனது முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளதுபோல புகார் கொடுக்கும்போது எனது கணவர் நிதானத்தில் இல்லை என்பதால் நான் சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் அளித்தேன் என்பது தவறானது என்றும் அந்த சமயத்தில் எனது கணவர் நல்ல மனநிலையிலும், திடகாத்திரமாகவும் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் முதல் பக்கத்தில் எனது கையெழுத்து இல்லை என்று சொன்னால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் இரண்டாவது பக்கத்தில் உள்ள கையெழுத்தும் என்னுடையதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் பதட்டத்தில் இருந்தபோது போட்டுக்கொடுத்த கையெழுத்துதான் அது. நான் பதட்டத்தில் இருந்ததால் நான் கையெழுத்துப்போட்ட புகார் வாக்குமூலத்தில் என்ன விபரங்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் படித்து காண்பித்துதான்

கையெழுத்து வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்த்தில் உள்ள விபரம் எதுவும் எனக்கு தெரியாது என்றும், அதில் உள்ள கையெழுத்தும் என்னுடையதில்லை என்றும், புகார் வாக்குமூலத்தை தயார் செய்தவர்தான் அதில் உள்ள எனது கையெழுத்தினையும் போட்டுள்ளார் என்றும் அதனால்தான் அனைத்து விபரங்களும் ஒன்றுபோலவே எழுதப்பட்டுள்ளது என்றும் அதனால்தான் உண்மைக்கு புறம்பாக மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல எனது கணவரை ஆஜர் எதிரிகள் உருட்டுகட்டையாலோ, கடப்பாறையாலோ தாக்கவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவ சமயத்தில் சந்தை என்பதால் எனது கணவரை யார் அடித்தார்கள் என்றோ, எனது கணவர் தன்னிச்சையாக விழுந்து காயத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றோ, அவருக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்றோ எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எனது கணவரை எந்தவித கெட்ட வார்த்தையாலும் யாரும் திட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் எங்களுக்கும் நடைபெறும் உரிமையியல் பிரச்சணை காரணமாக நாங்கள் தவறாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் முதல் விசாரணையில் அனைத்து விபரங்களையும் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. காயம்பட்ட நபர் எனது கணவர் என்பதாலும், அவர் மீதுள்ள பாசத்தின் காரணமாகவும் நான் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**